இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 27-06-2023

# பாட்னாவும் வாசிங்டனும் 1

இந்தியாவின் எதிர்காலத்துக்கான பாதையை பாட்னா வகுத்துக் காட்டி இருக்கிறது. வழிகாட்டி இருக்கிறது!

"பாட்னாவில் கூடினோம், மகிழ்ச்சியோடு திரும்பினோம்" - என்று தமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்கள்சொல்லிஇருக்கிறார்கள். அந்த வரிகளிலேயே மொத்தமும் அடங்கி இருக்கிறது.

**"ஒன்றிய அளவில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவது என்பதை நோக்கமாகக் கொண்டதாக இந்தக் கூட்டத்தை பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கூட்டினார். பா.ஜ.க. என்று சொல்வதால் தனிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிரான கூட்டணியாக இதனை யாரும் நினைக்க வேண்டாம். இந்தியாவின் ஜனநாயகத்தை - மக்களாட்சியை - மதச்சார்பின்மையை - பன்முகத்தன்மையை - ஒடுக்கப்பட்ட மக்களை - ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டு மானால் பா.ஜ.க. மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரக் கூடாது என்பதில் அனைத்துக் கட்சிகளும் தெளிவாக இருக்கிறோம். இதில் கடைசி வரை உறுதியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நான் சொல்லி இருக்கிறேன்" என்பதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "2023 ஜூன் 23 ஆம் தேதி கூடினார்கள் - 2024 மே மாதம் வெற்றி பெற்றார்கள் என்பது மட்டும் தான் வரலாற்றில் பதிவாக வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் நான் சொல்லி இருக்கிறேன்" என்றும் தெரிவித்துள்ளார்கள்.**

"பா.ஜ.க.வை வீழ்த்துவதை அனைத்துத் தலைவர்களும் ஒற்றை இலக்காகக் கொண்டு விட்டார்கள். பா.ஜ.க.வை வீழ்த்த அனைத்துக் கட்சிகளும் ஒன்று பட வேண்டும் என்று நினைத்தோம். அந்த ஒற்றுமை பாட்னாவில் ஏற்பட்டு விட்டது" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பதே இந்திய நாட்டுக்குச் சொன்ன நற்செய்தி ஆகும்.

மம்தா பானர்ஜி வரமாட்டார், அகிலேஷுக்கு ஆர்வம் இல்லை, அரவிந்த் கெஜ்ரிவால் நிச்சயம் வரமாட்டார் என்று தொடர்ச்சியாக எழுதி வந்தார்கள். அந்தக் கட்சியுடன் இந்தக் கட்சி சேராது, இவர்கள் இருந்தால் அவர்கள் வர மாட்டார்கள் என்று எழுதி வந்தார்கள். அவர்கள் ஆசையில் மண் விழ, அனைவரும் வந்துவிட்டார்கள்.

இப்போது இந்தியாவில் இருக்கும் மற்ற கட்சிகளின் பெயரை எழுதி அவர்கள் எல்லாம் பாட்னா வரவில்லை என்று எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். பாட்னாவுக்கு அழைப்பு விடுத்தவர்கள் அனைவரும் வந்திருக்கிறார்கள். அழைக்கப் படாதவர்கள் எப்படி வருவார்கள்? காங்கிரசு - பா.ஜ.க. ஆகிய இரண்டையும் எதிர்க்கும் சில கட்சிகளுக்கு பாட்னா கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மையே தவிர, அவர்கள் வரவில்லை என்பது உண்மையல்ல.

பாட்னா கூட்டம் வெற்றி என்பதன் அடையாளம்தான் அமித்ஷா பேச்சில் தெரிகிறது. 'அது எதிர்க்கட்சிகளின் போட்டோ ஷூட்' என்று வயிற்றெரிச்சலைக் காட்டி இருக்கிறார் உள்துறை அமைச்சர். ஒன்பது ஆண்டுகளாக இந்தியாவே மோடியின் போட்டோஷூட்டைத் தான் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அவர் எந்த உடை போடவில்லை? எந்த தொப்பி வைக்கவில்லை? யார் வேஷம் கட்டவில்லை? சுமார் ஆயிரம் வேஷங்களில் பிரதமரின் புகைப்படம் இணையத் தளங்களில் இருக்கிறது. மெகா போட்டோ ஷூட் தான் பா.ஜ.க. ஆட்சியே.

குஜராத் முன்னேறிவிட்டது என்று போலியான 'போட்டோ ஷாப்' மூலமாக ஆட்சியைப் பிடித்து, நித்தமும் போட்டோ ஷூட் நடத்திக் கொண்டு இருப்பதுதான் பா.ஜ.க.வின் ஆட்சியே தவிர, எதிர்க்கட்சிகள் நடத்துவது போட்டோஷூட் அல்ல!

**முதலில் இது எதிர்க்கட்சிகளின் கூட்டம் அல்ல. மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி சொல்லி இருக்கிறார்: "நாங்கள் எதிர்க்கட்சிகள் அல்ல, பாரத மாதாவை நேசிக்கும் தேசபக்தி கொண்ட இந்தியக் குடிமக்கள்" என்று சொல்லி இருக்கிறார். இந்தியாவில் ஜனநாயகம், ஒன்பது ஆண்டுகளாகக் கருகிக் கொண்டு இருக்கிறது. அதனைக் காப்பாற்றுவதற்கான கூட்டத்தின் தொடக்கம்தான் பாட்னா. "மீண்டும் இந்த அரசு வந்தால் இந்தியாவில் தேர்தல்களே நடக்காது" என்கிறார் மம்தா. "மதச்சார்பற்ற ஜனநாயக நாடு என்ற பெயரை மாற்ற பா.ஜ.க. விரும்புகிறது. நாம் அதனை பாதுகாக்க விரும்புகிறோம்" என்று சொல்லி இருக்கிறார் மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி.**

மணிப்பூர் ஐம்பது நாட்களாக பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. அமெரிக்காவில் ஜனநாயகம் பேசி வருகிறார் இந்தியப் பிரதமர். இந்தியாவில் ஜாதி, மதப் பாகுபாடு இல்லையாம். இந்தியாவில் பத்திரிக்கையாளர்களைப் பார்த்தே பழக்கம் இல்லாத பிரதமரிடம்,"இந்தியாவில் சிறுபான்மை யினருக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுவதாகவும், அரசை விமர்சிப்பவர்களை வாய் திறக்காமல் செய்வதாகவும் மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகிறதே?" என்று கேட்கப்படுகிறது.

"இந்தியாவின் மரபணுவில் ஜனநாயகம் உள்ளது. இந்திய அரசமைப்பு சட்டத்தில் ஜனநாயகம் உள்ளது. ஜனநாயக கொள்கைகளை நாங்கள் பின்பற்றுகிறோம். இந்தியா ஜனநாயக நாடு என அழைக்கப்படுகிறது. அப்படி அழைக்கப்படுவதால் இந்தியாவில் ஜனநாயகம் உள்ளது. ஜாதி, மத பாகுபாடுகள் இந்திய ஜனநாயகத்தில் காட்டப்படுவது இல்லை" - இதுதான் பிரதமரின் பதில்.

**இந்த பதிலில் ஜனநாயகம், ஜனநாயகம் என்ற வார்த்தை இருக்கிறது அவ்வளவுதான். ஆனால் நடைமுறையில் பா.ஜ.க.விடம் ஜனநாயகம் கிடையாது. 'மானே - தேனே போட்டுக்கோ' என்பது மாதிரி ஜனநாயகம், ஜனநாயகம் என்று பதிலில் சொல்லிக் கொண்டார்.**

- தொடரும்

## கடும் வெப்பம்: பாட்னாவில் பள்ளிகள் மூடல்!

பாட்னா, ஜூன் 27–

அதிக வெப்பம் காரணமாக பாட்னா மாவட்டத்தில் ஜூன் 28 ஆம் தேதி வரை 12 ஆம் வகுப்பு வரையிலான அரசு மற்றும் தனியார் பள்ளிகளை மூடுமாறு பாட்னா மாவட்ட நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட மாஜிஸ்திரேட் டாக்டர். சந்திர சேகர் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "பாட்னா நீதிமன்றத்தின் ஆர்டர் வீடியோவின் தொடர்ச்சியாக 16.06.2023 தேதியிட்ட மெமோ எண். 8534/L, மாவட்டத்தில் அதிக ஈரப்பதத்துடன் கூடிய அதிக வெப்பநிலை காரணமாக, குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் உயிருக்கு ஆபத்து இருப்பதாக எனக்குத் தோன்றியது. எனவே, நான், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ன் பிரிவு 144ன் கீழ், பாட்னா மாவட்டத்தில் உள்ள 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளின்(முன்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்கள் உட்பட) கல்வி நடவடிக்கைகளை 28.06.2023 வரை தடை செய்கிறேன். மேலே குறிப்பிட்டுள்ள உத்தரவு 26.06.2023 மற்றும் 28.06.2023 வரை அமலில் இருக்கும். 24.06.2023 அன்று எனது கையொப்பம் மற்றும் நீதிமன்ற முத்திரையுடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு எடமலைப்பட்டி புதூர் மாநகராட்சி பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்தியநாதன், சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், மருத்துவக் கல்லூரி முதல்வர் நேரு, பொறியாளர் சிவபாதம், சித்த மருத்துவர் காமராஜ், கவுன்சிலர் முத்துச்செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வரும் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்தாவிட்டால் இதுதான் 'நாட்டின் கடைசி பொதுத்தேர்தல்' என்பதை மறவாதீர்!

# பா.ஜ.க.வை வீழ்த்த பாட்னாவில் 16 கட்சிகளின் முடிவு - வெற்றிக்கான வெளிச்சம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 27 -

தமிழ்நாடு முதலமைச்சரின் முத்தான மூன்று யோசனைகள் சிறப்பானவை. பயன் தரும் மருந்து. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வே.

பாசிச பா.ஜ.க.வை வரும் மக்களவைத் தேர்தலில் வீழ்த்திட பீகார் தலைநகரமான பாட்னாவில் 16 கட்சிகளின் தலைவர்கள் கூடி முடிவெடுத்திருப்பது வெற்றிக்கான வெளிச்சம். தமிழ்நாடு முதலமைச்சரின் மூன்று யோசனைகள் ஆக்கப்பூர்வமான முத்தாய்ப்பானவை. பா.ஜ.க.வை வீழ்த்திட "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வே" என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் 16 முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் (இதில் தற்போதுள்ள ஆறு முதலமைச்சர்களும் அடங்குவர்) ஒன்றுகூடி, வருகின்ற 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் குறித்து ஆலோசித்துள்ளனர். அரசமைப்புச் சட்ட விதி நெறிகளையும், ஜனநாயகத்தையும் சீர்குலைத்து, இந்திய ஜனநாயகத்திற்கு விடை கொடுத்துவிட்டு, மக்கள் விரோத ஆட்சியை மூன்றாம் முறையாகவும் அமைக்க முனைந்து, எதேச்சதிகார பாசிசத்தை சிம்மாசனத்தில் அமர்த்தி. ஆள வைக்கும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வைத் தோற்கடிக்க சிறப்பான வியூகம் வகுக்கக் கூடியது காலத்தின் கட்டாயமாகும்.

### பொது எதிரியை வீழ்த்துவதே ஒரே குறி!

அக்கட்சிகளிடையே பல கருத்து மாறுபாடுகள், அணுகுமுறை வேறுபாடுகள் இருந்தாலும், பொது எதிரியை வீழ்த்த ஒன்று திரள்வது தவிர்க்கக்கூடாத ஒன்று என்பதை உணர்ந்து ஒன்று திரண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி கடந்த பல ஆண்டுகளாக அனைத்து முக்கிய கட்சிகளையும் ஓர் கூட்டணியில் கொள்கை அடிப்படையில் ஒன்று சேர்த்து வைத்து, மூன்று தேர்தல்களை (நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி மன்றம்) சந்தித்து பெற்ற வெற்றி மற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டி யுள்ளது; இந்தியாவிற்கே 'திராவிட மாடல்' ஆட்சித் தலைமை ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுவதோடு பாசிச எதிர்ப்பு அறப்போர் அரசியல் தளத்தில் ஒரு கூட்டணி அமைத்து நின்று வென்று காட்ட முடியும் என்பதை நம்பிக்கையுடன் விதைத்திருப்பது நல்ல முன்னோட்டமாக அமைந்துள்ளது. சரியான அறச்சீற்றம். பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், தேஜஸ்வி ஆகியோரின் சீரிய முயற்சி இடையறாத சந்திப்புகள் சிறந்த பலனைத் தந்துள்ளன நன்றி கூறுகிறோம்!

### நமது பாராட்டும் – வாழ்த்தும்!

கலந்துகொண்ட அத்துணைத் தலைவர்களும் ஒரே பொதுநோக்கோடு, ஒற்றை இலக்கோடு, தங்களை எது பிரிக்கிறதோ அதைத் தள்ளி வைத்து, தங்களை எது இணைக்கிறதோ அதனையே முன்னிலை ப்படுத்தி, இந்த முதல்கட்ட முயற்சியிலேயே வெற்றியின் வெளிச்சத்தை விடியலுக்கான சரியான வினைத்திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.



அனைத்துத் தலைவர்களுக்கும் நமது பாராட்டும் - வாழ்த்தும்.

### தமிழ்நாடு முதலமைச்சரின் ஆக்கப்பூர்வமான மூன்று யோசனைகள்!

பலூன் போன்று ஊதியுள்ள பண பலம், பத்திரிகை பலம், முரட்டு ஆள் பலம் எல்லாம் கொண்டதாக உள்ள ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. ஆட்சியை அகற்ற தக்க மூளை பலம் (Mind Power) பயன்படுத்தினால் வெற்றி சாத்தியமாவது உறுதி.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு பொதுத் திட்டம் ஜனநாயகம் மீட்பு மதச்சார்பின்மை சமூகநீதிகளுக்குப் பாதுகாப்பு வெறுப்பு அரசியலுக்கு விடை மனித உரிமை நிலைத்தல் உண்மையான குடியரசு தழைத்தல் இவற்றை முன் திட்டமாக்கி, இப்போதிருந்தே விரைவில் முடிவு எடுத்து, களப் பணியில் தீவிரப் பிரச்சாரத்தில் இறங்கிவிட வேண்டும்.

நமது முதலமைச்சர் பீகாரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று சென்னை விமான நிலையத்தில் 23.6.2023 அன்று அளித்த பேட்டியில் வெளியிட்ட கருத்து ஆக்கப்பூர்வமான செயல் திட்டம் நமது நோக்கமும்கூட.

1. எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ அந்தக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம். உதாரணத்திற்கு தமிழ்நாட்டில் 'திராவிட மாடல் ஆட்சி' அதன் தலைமையில் ஒற்றை இலக்குக் கூட்டணி.

2. அது இயலாவிட்டால், தொகுதி உடன்பாடு; பா.ஜ.க.வுக்கு எதிராக பலமான ஒரு வேட்பாளர்.

3. அதுவும் முடியாவிட்டால், பொது வேட்பாளர் அறிவித்து ஒன்றுபட்ட தேர்தல் பணி.

இந்த முறையில்தான், தீயணைப்பதில் எப்படி ஒரே நோக்கம், இலக்கு உண்டோ, அதுபோன்று ஒரு நடைமுறையை விரைவில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

### ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

16 கட்சிகள் கூடி ஒருங்கிணைந்துள்ள நிலையில், தன்முனைப்புக்கு இடமின்றி, நாட்டு நலன் ஜனநாயக மீட்புபற்றி மட்டுமே சிந்தித்து, மற்றவற்றைப் பின்னே தள்ளிவிட வேண்டும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு!"

இன்றேல், பல தலைவர்கள் சுட்டிக்காட்டி வருவது போல், இதுதான் (2024) கடைசி பொதுத் தேர்தல் என்றாகிவிடும். ஆபத்து தவிர்க்க முடியாத கடுஞ்சோதனையாகிவிடும் என்பதைத் தலைவர்கள் சிந்திக்க; செயலாற்றுக.

மக்கள் தயாராகி உள்ளனர். - தலைவர்களே, நீங்கள் தயாராகுங்கள்.

இவ்வாறு அறிக்கையில் வீரமணி கூறியுள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு

# பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

## சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடக்கி வைத்தார்!

கும்பகோணம்ஜூன்.27-


கும்பகோணம் அருகே கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பன்னோக்கு சிறப்பு மருத்துவமுகாம்நடைபெற்றது.

முத்தமிழறிஞர்கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவைமுன்னிட்டு,தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், கும்பகோணம் தொகுதி, திப்பிராஜபுரம்ஊராட்சியில்அமைந்துள்ளஅரசினர்உயர்நிலைப் பள்ளியில், பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டுத் திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாம் ஆகியவற்றை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர்சாக்கோட்டைக.அன்பழகன் தொடங்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும், பள்ளி மாணவ - மாணவிகளுக்கு கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் கண் கண்ணாடிகளையும், காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும், காப்பீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு காப்பீட்டுத் திட்ட அட்டைகளையும் வழங்கினார்.

முகாமில்,இரத்தஅழுத்த பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, எக்கோ, இசிஜி, முழு இரத்த பரிசோதனை, மார்பக புற்றுநோய் கண்டறியும்பரிசோதனை, தொழுநோய் கண்டறியும் பரிசோதனை, காசநோய் பரிசோதனை, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை நடைபெற்றது. மேலும், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்குதொண்டை,பல்மருத்துவம், எலும்பியல் மருத்துவம் மற்றும் மனநல மருத்துவத்திற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணை பெருந்தலைவரும், மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளருமான தி.கணேசன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவரும், மேற்கு ஒன்றியச் செயலாளருமான எஸ்.கே.முத்து செல்வம், கும்பகோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர், மருத்துவத் துறை இணை இயக்குநர் மருத்துவர் திலகம், உதவி இயக்குநர் மருத்துவர் ரவிச்சந்திரன், வட்டாரமருத்துவ அலுவலர் மருத்துவர் கலாராணி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள்பாண்டியன், சசிகுமார், திப்பிராஜபுரம் ஊராட்சி மன்ற தலைவர் சா.முருகையன், திப்பிராஜபுரம்ஊராட்சிதிமுகநிர்வாகிகள் எஸ்.வி.எஸ்.இளங்கோவன்,பழனி,கீழச்சேத்தி ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சமூக நீதிக்காக அச்சமின்றிப் போராடிய வி.பி.சிங்கிற்கு வீரவணக்கம் செலுத்துவோம்!



**இன்று ஜூன் 25,**

இந்தியாவின் சமூகநீதிக் காவலர், முன்னாள் பிரதமர் வி.பி.சிங்.அவர்களின் பிறந்த நாள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரை, கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்ற வேண்டும் என்பதில், இறுதிவரை உறுதியாக இருந்த அந்த உண்மையான புரட்சித் தலைவருக்கு வீரவணக்கம் செலுத்துவோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் அவர் சமூக நீதிக்காக அச்சமின்றிப் போராடினார், இடஒதுக்கீடு நமது உரிமை என்பதை வலியுறுத்த அனைவரையும் தைரியப்படுத்தினார்.

வி.பி.சிங். - நம் தமிழினத் தலைவர் கலைஞர் ஆகிய இரு பெருந் தலைவர்களின் சிந்தனையும், ஒத்திசைவுடன் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருந்தது. ஏனெனில் இவர்கள் அனைத்து சமூகத்திற்கும் அதிகாரம் அளிக்கும் பொதுவான இலக்கைப் பகிர்ந்து கொண்டார்கள். இவர்களது எண்ணங்கள் ஒளிமயமான மற்றும் சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மை வழிநடத்தும்.